# 31 சனவரி 2024 அன்று ஆஸ்திரேலியக் குடிவரவுத் தடுப்புக்காவலில் இருக்கும் அனைத்து நபர்களுக்குமான அறிவிப்பு

## உங்களுக்குள்ள உரிமைகளைப் பாதிக்கக்கூடிய முக்கியமான ஒரு அறிவிப்பாகும் இது.

**www.immigrationdatabreach.com.au -எனும் இணைப்பில் பின் வரும் மொழிகளில் இந்த அறிவிப்பு கிடைக்கும்.**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அரபு | அசெர்பைஜானி (வடக்கு) | பெங்காலி | பர்மியம் | கேண்ட்டனீஸ் | தாரி | ஹசாரகி |
| ஹிந்தி | இந்தோனேசியம் | குர்திஷ் (குர்மாஞ்சி) | குர்திஷ் (சொரானி) | மாண்டரீன் | பஷ்த்து | பெர்ஷியம் |
| பஞ்சாபி | சிங்களம் | சில்ஹெட்டி | தமிழ் | உருது | உஸ்பெக் | வியட்நாமியம் |

## 1 இந்த 'அறிவிப்பு' எதைப் பற்றியது?

*தகவல் அத்துமீறல் குறித்த பின்னணி*

1.1 'தற்போது 'உள்நாட்டு விவகாரத் திணைக்களம்' (Department of Home Affairs) **(திணைக்களம்)** என்று சொல்லப்படும் 'குடிவரவு மற்றும் எல்லைப் பாதுகாப்புத் திணைக்கள'(Department of Immigration and Border Protection) த்தின் வலைத்தலம் வாயிலாக நிகழ்ந்த தகவல் அத்துமீறலைப் பற்றியதாகும் இந்த 'அறிவிப்பு' *(notice)*.

1.2 தோராயமாக 9,000 நபர்களைப் பற்றிய தனிப்பட்ட தகவல்களைக் கொண்ட விரிவு-ஏடு *(spreadsheet)* ஒன்று 10 ஃபிப்ரவரி 2014 அன்று அந்த வலைத்தலத்தில் வெளியிடப்பட்டது. அந்த நபர்கள் குடிவரவுத் தடுப்புக்காவலில் அல்லது வேறு தடுப்புக்காவல் இடங்களில் இருந்தனர். அந்த வலைத்தலத்தில் அந்த விரிவு-ஏடு வெளியிடப்பட்டிருக்கக் கூடாது. அது ஒரு அசம்பாவித நிகழ்வு. உங்களுடைய பெயர் மற்றும் முகவரி போன்ற தனிநபர் ஒருவரைப் பற்றிய தகவல்களின் எதிர்பாரா வெளியீடு ஒரு 'தகவல் அத்துமீறல்' (*Data Breach*) என்று சொல்லப்படுகிறது.

1.3 'திணைக்கள'த்தின் வலைத்தலத்திலிருந்து 19 ஃபிப்ரவரி 2014 அன்றும், 'திணைக்கள' வலைத்தலத்தின் வரலாற்று உருவில் இருந்து 27 ஃபிப்ரவரி 2014 அன்றும் தனிநபர்களைப் பற்றிய இந்தத் தகவல்கள் நீக்கப்பட்டன.

*'ஆஸ்திரேலிய தகவல் ஆணையர் அலுவலக' (Office of the Australian Information Commissioner) த்திற்கு செய்யப்பட்ட முறைப்பாடு*

1.4 இந்தத் தகவல் அத்துமீறலினால் பாதிக்கப்பட்ட அனைத்து நபர்களின் சார்பாகவும் 30 ஆகஸ்ட்டு 2015 அன்று 'ஆஸ்திரேலிய தகவல் ஆணையர் அலுவலக' (Office of the Australian Information Commissioner -OAIC)) த்திற்கு முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டது. 'ஆஸ்திரேலியத் தகவல் ஆணையர்' இந்த முறைப்பாட்டினை ஆய்வு செய்தார்.

1.5 இந்தத் தகவல் அத்து மீறலினால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய அனைத்து நபர்களுக்கும் 24 சனவரி 2018 அன்று (இதைப் போன்ற) 'அறிவிப்பு' ஒன்றை OAIC அனுப்பியது (**முதலாம் அறிவிப்பு**). இந்தத் தகவல் அத்துமீறலின் தாக்கத்தைப் பற்றிய தகவல்களை இந்த 'அறிவிப்பு' கேட்டது.

1.6 11 சனவரி 2021 அன்று 'ஆஸ்திரேலிய தகவல் ஆணையர்' பின் வரும் முடிவுகளை மேற்கொண்டார்:

(1) தகவல் அத்துமீறலின் ஒரு விளைவாக, இந்தத் தகவல் அத்துமீறலால் பாதிக்கப்பட்டவர்களுடைய அந்தரங்கத்தன்மையில் 'திணைக்களம்' இடையூறு செய்தது; மற்றும்

(2) இந்தத் தகவல் அத்துமீறலின் ஒரு விளைவாக தமக்கு ஏற்பட்ட இழப்பு அல்லது சேதாரத்திற்கான நஷ்டஈட்டைப் பெறுவதற்கான உரிமம் இந்தத் தகவல் அத்துமீறலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உள்ளது.

1.7 'ஆஸ்திரேலிய தகவல் ஆணைய'ரின் இந்த முடிவை எதிர்த்து '*நிர்வாக மேல்முறையீட்டு மன்ற*' (Administrative Appeals Tribunal (**AAT**)) த்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்தத் தகவல் அத்துமீறலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நஷ்டஈட்டினை அவர்கள் மதிப்பீடு செய்துகொள்ளும் புதிய செயல்முறை ஒன்றை 13 செப்டம்பர் 2023 அன்று AAT ஏற்படுத்தியது. இந்த செயல்முறை 'நஷ்டஈடு மதிப்பீட்டுத் திட்டம்' (*Compensation Assessment Scheme*) என்று சொல்லப்படுகிறது.

*<u>நஷ்டஈடு மதிப்பீட்டுத் திட்டம்' (Compensation Assessment Scheme)</u>*

1.8 AAT-யினது முடிவின் பிரகாரம், இந்தத் தகவல் அத்துமீறலினால் பாதிப்பட்டோருக்குக் வழங்கப்படவிருக்கும் நஷ்டஈட்டினை சுயாதீனமாக மதிப்பீடு செய்வதற்காக 'நோர்ட்டன் ரோஸ் ஃபுல்ப்ரைட் ஆஸ்திரேலியா' (Norton Rose Fulbright Australia (NRFA)) எனும் சட்ட நிறுவனம் நியமனம் செய்யப்பட்டிருக்கிறது.

1.9 இந்த 'நஷ்டஈடு மதிப்பீட்டுத் திட்ட' த்தின் முதல் படியாகும் இந்த 'அறிவிப்பு'.

 © Norton Rose Fulbright Australia

## 2 நான் செய்யவேண்டியது என்ன?

2.1 இந்தத் தகவல் அத்துமீறலின் ஒரு விளைவாக இழப்பு அல்லது சேதாரம் எதுவும் உங்களுக்கு ஏற்பட்டிருக்காவிட்டால் நஷ்டஈட்டிற்கான உரிமம் உங்களுக்கு இருக்காது. இந்த அறிவிப்பிற்கு நீங்கள் மறுமொழி அளிக்கவேண்டிய தேவையில்லை.

2.2 இந்தத் தகவல் அத்துமீறலின் ஒரு விளைவாக இழப்பு அல்லது சேதாரம் உங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்று நீங்கள் நம்பினால், அல்லது அதைப் பற்றி உங்களுக்கு உறுதியாகத் தெரியவில்லை என்றால், மற்றும் 'நஷ்டஈடு மதிப்பீட்டுத் திட்ட'த்தின் கீழ் நஷ்டஈடு கோர நீங்கள் விரும்பினால், www.immigrationdatabreach.com.au எனும் இணைப்பில் கிடைக்கும் இணையவழியிலான 'மறுமொழிப் படிவ'(***Response Form***) த்தினை நிரப்புவதன் மூலம் இந்த 'அறிவிப்'பிற்கு நீங்கள் கட்டாயமாக மறுமொழி அளித்தாகவேண்டும். இழப்பு அல்லது சேதாரத்திற்கான உதாரணங்களைக் கீழேயுள்ள 6-ஆம் பத்தியில் பாருங்கள்.

2.3 இந்தத் தகவல் அத்துமீறலின் ஒரு விளைவாக இழப்பு அல்லது சேதாரம் உங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்று நீங்கள் நம்பினால், ஆனால் 'நஷ்டஈடு மதிப்பீட்டுத் திட்ட'த்தில் பங்குபற்ற நீங்கள் விரும்பவில்லை என்றால், இந்த 'அறிவிப்'பிற்கான மறுமொழியில் 'வெளியேறும் தெரிவு' ('*opt-out*')-ஐ நீங்கள் கட்டாயமாக மேற்கொண்டாக வேண்டும். வெளியேறும் தெரிவு' ('*opt-out*')-ஐ நீங்கள் தெரிவு செய்ய இந்த 'மறுமொழிப் படிவம்' உங்களை அனுமதிக்கும். இந்த 'நஷ்டஈடு மதிப்பீட்டுத் திட்ட'த்திலிருந்து வெளியேறுவதனால் ஏற்படும் விளைவுகளைப் பற்றிய மேலதிகத் தகவல்களை கீழேயுள்ள 3-ஆம் பத்தியில் தயவுசெய்து பாருங்கள்.

2.4 இந்தப் படிவத்தில் நீங்கள் கொடுக்கும் தகவல்கள் NRFA சட்ட நிறுவனத்திற்கு அனுப்பப்படும். நம்பத்தக்க இண்ட்டெர்நெட் இணைப்பு உங்களுக்கு இல்லை என்றால், இந்த 'மறுமொழிப் படிவ'த்தின் காகிதப் பிரதி ஒன்றையும் நீங்கள் நிரப்பலாம், மற்றும் உங்களுடைய மறுமொழியை அஞ்சல் மூலமாக Compensation Assessment Scheme, Norton Rose Fulbright Australia, Level 6, 60 Martin Place, SYDNEY, NSW 2000 என்ற முகவரிக்கு அனுப்பலாம். auscas@nortonrosefulbright.com எனும் மின்னஞ்சல் மூலம், அல்லது (02) 9330 8006 எனும் இலக்கத்தில் NRFA சட்ட நிறுவனத்துடன் தொடர்புகொள்வதன் மூலம் 'மறுமொழிப் படிவ'த்தின் காகிதப் பிரதி ஒன்று வேண்டுமெனக் கேளுங்கள்.

2.5 இந்த 'அறிவிப்'பிற்கான மறுமொழி ஒன்றை **10 ஜூன் 2024 அன்று மாலை 4 மணி (காலாவதிக்கோடு)** -க்கு உள்ளாக நீங்கள் கட்டாயம் கொடுத்தாகவேண்டும். மறுமொழி அளிப்பதற்குக் கால நீட்டிப்பு ஒன்று வேண்டுமென நீங்கள் கேட்கலாம், இருப்பினும், கால நீட்டிப்பு ஒன்று உங்களுக்குக் கிடைக்கும் என்று உத்தரவாதம் அளிக்க இயலாது.


© Norton Rose Fulbright Australia

2.6 கால நீட்டிப்புக்களுக்கான அனைத்து வேண்டுகோள்களும் கட்டாயமாக மின்னஞ்சல் மூலம் auscas@nortonrosefulbright.com எனும் முகவரிக்கு அனுப்பப்படவேண்டும், அல்லது பதிவு அஞ்சல் மூலமாக Compensation Assessment Scheme, Norton Rose Fulbright Australia, Level 6, 60 Martin Place, SYDNEY, NSW 2000 எனும் முகவரிக்கு அனுப்பப்படவேண்டும். 02 9330 8006 எனும் இலக்கம் மூலமாக NRFA சட்ட நிறுவனத்துடன் தொடர்புகொண்டும் கால நீட்டிப்பு ஒன்றை நீங்கள் வேண்டலாம்.

2.7 **<u>'இந்த 'முதல் அறிவிப்பு' (First Notice)-இற்கு நீங்கள் மறுமொழி அளிக்கவில்லை என்றால், மற்றும் இந்த 'அறிவிப்பு' (Notice)-இற்குக் காலாவதிக் கோட்டிற்குள் மறுமொழி அளிக்காவிட்டால் (மற்றும் கால நீட்டிப்பு ஒன்றைப் பெறாவிட்டால்), இந்த தகவல் அத்துமீறலின் ஒரு விளைவாக உங்களுக்கு ஏற்பட்ட இழப்பு அல்லது சேதாரம் எதற்கும் நீங்கள் நஷ்டஈடு பெறமாட்டீர்கள்.</u>**

## 3 இந்த 'நஷ்டஈடு மதிப்பீட்டுத் திட்ட'த்தில் இருந்து 'வெளியேறும் தெரிவை மேற்கொள்வது' என்றால் என்ன அர்த்தம்?

3.1 இந்த 'நஷ்டஈடு மதிப்பீட்டுத் திட்ட'த்தின் கீழ் நஷ்டஈட்டை நீங்கள் பெற்றால், வேறு வழிகளின் மூலமாக இந்தத் தகவல் அத்துமீறலுக்காக நஷ்டஈடு வேண்டுவதற்கான உங்களுடைய அனைத்து உரிமைகளும் (நீதிமன்ற வழக்குகளைத் துவங்குவது உள்ளடங்க) **துடைத்தழிக்கப்பட்டுவிடும்** என்பதைத் தயவு செய்து கவனத்தில் கொள்ளுங்கள்.

3.2 உங்களுடைய கோரிக்கையை நியாயமான முறையில் மதிப்பீடு செய்து உங்களுக்கும் 'திணைக்கள'த்திற்கும் இடையே இருக்கும் எவ்வொரு சச்சரவிற்கும் முடிவு காண்பதே இந்த 'நஷ்டஈடு மதிப்பீட்டுத் திட்ட'த்தின் நோக்கமாகும் என்பது இதற்கான காரணம்.

3.3 இந்த 'நஷ்டஈடு மதிப்பீட்டுத் திட்ட'திற்கு அப்பாற்பட்டு உங்களுடைய சட்ட உரிமைகளை நீங்கள் தொடர விரும்புகிறீர்கள் என்றால் 'மறுமொழிப் படிவ'த்தில் உள்ள 'வெளியேறும் தெரிவு' எனும் பொத்தானை அழுத்தி 'நஷ்டஈடு மதிப்பீட்டுத் திட்ட'த்தில் இருந்து 'வெளியேறும் தெரி'('opt-out')வை நீங்கள் மேற்கொள்ளவேண்டும். 'வெளியேறும் தெரி'('opt-out') வை மேற்கொள்ள நீங்கள் முடிவு செய்வதற்கு முன்பாக அந்த முடிவைக் குறித்து சட்ட ஆலோசனையை நாடுமாறு உங்களை ஊக்குவிக்கிறோம், வேறு வகையான கோரிக்கைகளுக்கு ஆகும் செலவுகள், அதிலுள்ள சிரமங்கள், மற்றும் 'நஷ்டஈடு மதிப்பீட்டுத் திட்ட'த்திற்கு அப்பாற்பட்ட கோரிக்கை ஒன்றை விடுக்க இயலாத அளவிற்கு இந்தத் தகவல் அத்துமீறல் நிகழ்ந்ததிலிருந்து மிகவும் அதிகமான காலம் கடந்துவிட்டதா என்ற விடயங்கள் இதில் உள்ளடங்கும்.


© Norton Rose Fulbright Australia

## 4 ‘முதல் அறிவிப்பு’ (First Notice)-இற்கு மறுமொழியாக நான் ஏற்கனவே தகவல்களைக் கொடுத்திருந்தால் என்ன ஆகும்?

4.1 ‘முதல் அறிவிப்பு’ -இற்கு மறுமொழியாக நீங்கள் ஏற்கனவே தகவல்களைக் கொடுத்திருந்தால், நீங்கள் உரிமம் பெறக்கூடிய நஷ்டஈட்டினை NRFA சட்ட நிறுவனம் மதிப்பீடு செய்யும் பொழுது இந்தத் தகவல்கள் கருத்தில் கொள்ளப்படும். அதே தகவல்களை நீங்கள் மீண்டும் கொடுக்கவேண்டிய தேவையில்லை.

4.2 இந்த ‘அறிவிப்’பிற்கு நீங்கள் கொடுக்கும் மறுமொழியில் புதுப்பிக்கப்பட்ட அல்லது கூடுதல் தகவல்களை நீங்கள் கொடுக்க விரும்பினால், காலாவதிக்-கோட்டிற்கு முன்பாக நீங்கள் அதைக் கொடுக்கவேண்டும் என்பது முக்கியம்.

## 5 ‘முதல் அறிவிப்பு’ (First Notice)-இற்கு நான் மறுமொழி அளிக்கவில்லை என்றால் எப்படி?

5.1 முக்கியமான தகவல்களை NRFA சட்ட நிறுவனத்திற்கு நீங்கள் கொடுப்பதற்கான இன்னொரு வாய்ப்பு உங்களுக்கு இப்போது இருக்கிறது.

5.2 இருந்தாலும், ‘முதல் அறிவிப்பு’ -இற்கு நீங்கள் ஏன் மறுமொழி அளிக்கவில்லை என்பதற்கான விளக்கத்தினை நீங்கள் கொடுக்கவேண்டும். அதற்குப் பிறகு ‘நஷ்டஈடு மதிப்பீட்டுத் திட்ட’த்தில் பங்கேற்கும் உரிமம் உங்களுக்கு இருக்கிறதா என்று NRFA சட்ட நிறுவனம் மதிப்பீடு செய்யும்.

5.3 ‘முதல் அறிவிப்பு’ -இற்கு நீங்கள் ஏன் மறுமொழி அளிக்கவில்லை என்பதற்கு ஏற்றதாக இருக்கக்கூடிய தகவல்களில் பின் வருவன உள்ளடங்கலாம்:

(1) ‘முதல் அறிவிப்பு’ -ஐ நீங்கள் பெறவில்லை என்பதற்கான ஆதாரம்;

(2) OAIC-யினால் உங்களுடைய மறுமொழி சரியான முறையில் பெறப்படவில்லை என்பதற்கான சான்று;

(3) நஷ்டஈட்டிற்கு நீங்கள் தகுதி பெறமாட்டீர்கள் என்ற தவறான கருத்தை நீங்கள் கொண்டிருந்தீர்கள் என்பதை விளக்கிச் சொல்லும் எழுத்து மூலமான ஒரு வாக்குமூலம்;

(4) ‘முதல் அறிவிப்பு’ -இற்கு மறுமொழி அளிப்பது எப்படி என்று உங்களுக்கு விளங்கவில்லை அல்லது உங்களுக்குத் தெரியவில்லை என்பதை விளக்கிச் சொல்லும் எழுத்து மூலமான ஒரு வாக்குமூலம்; அல்லது

(5) ‘முதல் அறிவிப்பு’ -இற்கு மறுமொழி அளிப்பதிலிருந்து உங்களைத் தடுத்த மற்ற சூழ்நிலைகள் (மருத்துவ நோய், நிதிநிலைச் சிரமங்கள், அல்லது குடும்ப அங்கத்தவர்களைப் பராமரிக்கவேண்டிய பொறுப்புகள்) என்ன என்பதை என்பதை விளக்கிச் சொல்லும் எழுத்து மூலமான ஒரு வாக்குமூலம்;

 © Norton Rose Fulbright Australia

## 6 எந்த விதமான இழப்பு அல்லது சேதாரத்திற்காக என்னால் நஷ்டஈடு பெற இயலும்?

6.1 பின் வருவனவற்றிற்காக 'நஷ்டாஈடு மதிப்பீட்டுத் திட்ட'த்தினால் உங்களுக்கு நஷ்டாஈடு வழங்க இயலும்:

(1) பொருளாதார இழப்பு அல்லது சேதாரம் *(**Economic Loss**)*; மற்றும்

(2) பொருளாதாரம்-சாரா இழப்பு அல்லது சேதாரம் ***(Non-Economic Loss)***.

6.2 இந்தத் தகவல் அத்துமீறலினால் ஏற்படுத்தப்பட்ட பொருளாதார இழப்பு அல்லது பொருளாதாரம்-சாரா இழப்பிற்காக மட்டுமே 'நஷ்டாஈடு மதிப்பீட்டுத் திட்ட'த்தினால் உங்களுக்கு நஷ்டாஈடு வழங்க இயலும். இந்தத் தகவல் அத்துமீறலினால் ஏற்படுத்தப்படாத மற்ற இழப்பு அல்லது சேதாரத்திற்காக 'நஷ்டாஈடு மதிப்பீட்டுத் திட்ட'த்தினால் உங்களுக்கு நஷ்டாஈடு வழங்க இயலாது.

<u>பொருளாதார இழப்பு *(Economic Loss)*</u>

6.3 இந்தத் தகவல் அத்துமீறலின் காரணமாக உங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட நிதிசார் இழப்பு அல்லது உங்களுக்கு ஏற்பட்ட பணச் செலவு (உங்களுடைய சொந்தப் பணத்தை செழவழித்ததன் காரணமாக ஏற்பட்ட இழப்பு) அல்லது அதன் காரணமாக நீங்கள் பெறாத வருமானம் (வருமான இழப்பு) போன்றவை பொருளாதார இழப்பைக் குறிக்கும். இதில் உள்ளடங்கக் கூடியவை:

(1) இந்தத் தகவல் அத்துமீறலின் காரணமாக உங்களுடைய சொந்தப் பணத்தைச் செலவழிக்க வேண்டிய விதத்தில் உங்களுக்கு ஏற்பட்ட மருத்துவச் செலவுகள் எதுவும். பின் வருவனவற்றோடு சம்பந்தப்பட்ட செலவுகள் எதுவும் இதில் உள்ளடங்கக் கூடும்:

(a) மருத்துவத் தொழிலர்களுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்கள்;

(b) மருந்துகள் மற்றும் சிகிச்சைகள்; மற்றும்

(c) மருத்துவ அறிக்கைகள்;

(2) இந்தத் தகவல் அத்துமீறல் காரணமான ஒரு விளைவினால் வேலை செய்ய இயலாமல் இருந்ததன் காரணமாக ஏற்பட்ட வருமான இழப்பு எதுவும்; மற்றும்

(3) இந்தத் தகவல் அத்துமீறலின் காரணமாக உங்களுடைய சொந்தப் பணத்தைச் செலவழிக்க வேண்டிய விதத்தில் உங்களுக்கு ஏற்பட்ட, பின் வருவனவற்றை உள்ளடக்கிய மற்ற செலவுகள் எதுவும்:

(a) இந்தத் தகவல் அத்துமீறலின் காரணமான ஒரு விளைவினால் முன்பு OAIC-இற்கு செய்யப்பட்ட முறைப்பாடுகள் அல்லது ‘முதல் அறிவிப்பு’ -இற்கு அளிக்கப்பட்ட மறுமொழிகள் எதனுடனும் சம்பந்தப்பட்ட செலவுகள்; மற்றும்

(b) இந்தத் தகவல் அத்துமீறலின் காரணமான ஒரு விளைவினால் உங்களுடைய அடையாளத்தை மறைப்பதற்கு ஆன செலவுகள்.

பொருளாதாரம்-சாரா இழப்பு *(Non-Economic Loss)*

6.4 பொருளாதாரம்-சாரா இழப்பு என்பது பணம் சாராதத் தன்மையுடைய ஒரு இழப்பைக் குறிக்கும் (அதாவது, பொருளாதார இழப்பு எதையும் இது உள்ளடக்காது). பொருளாதாரம்-சாரா இழப்பில் பின் வருவன உள்ளடங்கக் கூடும்:

(1) பதற்றம், மன அழுத்தம், பயம், சினம், வலி மற்றும் துன்பம், அவமானம் அல்லது சங்கடம் ஆகிய உணர்வுகள்;

(2) இந்தத் தகவல் அத்துமீறலின் காரணமான ஒரு விளைவினால் உங்களுக்கு ஏற்பட்ட நித்திரை இழப்பு அல்லது தலையிடிகள் போன்ற உடல்-ரீதியான அல்லது உள-ரீதியான நோயறிகுறிகள்;

(3) இந்தத் தகவல் அத்துமீறலின் காரணமாக உருவாக்கப்பட்டவை அல்லது இன்னும் தீவிரமானவையாக ஆக்கப்பட்டவை என்று மருத்துவத் தொழிலர் ஒருவரால் கண்டறியப்பட்ட மருத்துவ நிலைகள்.

## 7 NRFA சட்ட நிறுவனத்திற்கு நான் எவ்வகையான தகவல்களைக் கொடுக்கவேண்டும்?

7.1 குறிப்பிட்ட வகையான தகவல்களைக் கொடுக்குமாறு ‘மறுமொழிப் படிவம்’ (Response Form) உங்களைக் கேட்கும். உங்களுடைய நஷ்டஈட்டுக் கோரிக்கைக்கு ஆதாரமாகக் கூடுதல் தகவல்களைக் கொடுக்கும் தெரிவும் உங்களுக்கு உள்ளது.

7.2 ‘பொருளாதார இழப்பு’ அல்லது ‘பொருளாதாரம்-சாரா இழப்பு’ குறித்த நஷ்டஈட்டிற்கான உங்களுடைய உரிமத்தை மரிப்பீடு செய்யும் பொழுது பலதரப்பட்ட ஆதாரங்களை NRFA சட்ட நிறுவனம் கருத்தில் கொள்ளும்.

7.3 நீங்கள் சமர்ப்பிக்கவல்ல ஆதாரங்களின் வகைகளுக்கான உதாரணங்கள் பின் வருவனவாகும்:

‘பொருளாதார இழப்பு’ (Economic Loss)-இற்கு உதவும் ஆதாரம்

(1) இந்தத் தகவல் அத்துமீறலினால் ஏற்பட்ட ஒரு விளைவின் காரணமாக உங்களுக்கு ஏற்பட்ட செலவுகளுக்கான ரசீதுகள் அல்லது


© Norton Rose Fulbright Australia

பதிவுகள். உதாரணத்திற்கு, பின் வருவனவற்றிற்கான ரசீதுகளை இது உள்ளடக்கும்:

(a) இந்தத் தகவல் அத்துமீறலினால் ஏற்பட்ட ஒரு விளைவின் காரணமாக மருத்துவத் தொழிலர்களுடன் மேற்கொள்ளப்பட்ட சந்திப்புகள்;

(b) இந்தத் தகவல் அத்துமீறலினால் ஏற்பட்ட ஒரு விளைவின் காரணமாக மருத்துவத் தொழிலர்களால் ஆயத்தம் செய்யப்பட்ட அறிகைகள்;

(c) இந்தத் தகவல் அத்துமீறலினால் ஏற்பட்ட ஒரு விளைவின் காரணமாக இந்தத் தகவல் அத்துமீறலைப் பற்றி OAIC-இற்கு முன்பு செய்யப்பட்ட முறைப்பாடு எதன் சம்பந்தமாகவும் (சட்டதரணி ஒருவர் காரணமாக ஏற்பட்ட செலவுகள்), அல்லது 'முதல் அறிவிப்பு' -இற்கு நீங்கள் மறுமொழி அளித்தது சம்பந்தமாக உங்களுக்கு ஏற்பட்ட செலவுகள்; மற்றும்

(d) இந்தத் தகவல் அத்துமீறலினால் ஏற்பட்ட ஒரு விளைவின் காரணமாக உங்களுடைய அடையாளத்தைப் பாதுகாப்பதற்காக ஏற்பட்ட மற்ற செலவுகள்.

(2) இந்தத் தகவல் அத்துமீறலின் காரணமாக வேலை செய்ய இயலாமல் இருந்ததனால் ஏற்பட்ட வருமான இழப்பு எதையும் காண்பிக்கும் சம்பளத் துண்டுகள், உங்களுடைய முதலாளியிடமிருந்து வந்த கடிதங்கள், மருத்துவச் சான்றுகள் மற்றும் எவ்வொரு ஆவணங்களும்; மற்றும்

(3) இந்தத் தகவல் அத்துமீறலினால் ஏற்பட்ட ஒரு விளைவின் காரணமாக உங்களுக்கு ஏற்பட்ட பொருளாதார இழப்பு எதையும் விளக்கிச் சொல்லும் உங்களால், உங்களுடைய குடும்ப அங்கத்தவர்களால் அல்லது உங்களுக்கு நெருக்கமான மற்ற நபர்களால் ஏற்படுத்தப்பட்ட மற்றும் கையொப்பமிடப்பட்ட சட்டப்படியான பிரகடனங்கள் அல்லது வாக்குமூலங்கள்.

<u>'பொருளாதாரம்-சாரா இழப்பு' (Economic Loss)-இற்கு உதவும் ஆதாரம்</u>

(1) இந்தத் தகவல் அத்துமீறல் உங்களுடைய உடல்ரீதியான அல்லது உளரீதியான பொதுநலத்தின் மீது எவ்வாறு தாக்கம் ஏற்படுத்தியிருக்கக் கூடும் என்பது உள்ளடங்க, இதன் காரணமாக உங்கள் மீது ஏற்பட்ட தாக்கத்தினை விளக்கிச் சொல்லும் உங்களால், உங்களுடைய குடும்ப அங்கத்தவர்களால் அல்லது உங்களுக்கு நெருக்கமான மற்ற நபர்களால் ஏற்படுத்தப்பட்ட மற்றும் கையொப்பமிடப்பட்ட சட்டப்படியான பிரகடனங்கள் அல்லது வாக்குமூலங்கள்; மற்றும்

 © Norton Rose Fulbright Australia

(2) மருத்துவத் தொழிலர் ஒருவரிடம் இருந்து வந்த பின் வருவனவற்றை விளக்கிச் சொல்லும் அறிக்கைகள், பதிவுகள் மற்றும் சான்றுகள்:

(a) இந்தத் தகவல் அத்துமீறலினால் ஏற்படுத்தப்பட்ட அல்லது இன்னும் தீவிரமானதாக ஆக்கப்பட்ட உங்களுக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய மருத்துவ நிலைகள் எதுவும்;

(b) இந்தத் தகவல் அத்துமீறலினால் ஏற்பட்ட ஒரு விளைவின் காரணமாக உங்களுடைய மருத்துவத் தொழிலருடன் நீங்கள் மேற்கொண்ட கலந்துரையாடல்கள் எதுவும்; மற்றும்/அல்லது

(c) இந்தத் தகவல் அத்துமீறலினால் ஏற்பட்ட ஒரு விளைவின் காரணமாக நீங்கள் பெற்ற சிகிச்சை எதுவும்.

## 8 இந்த 'அறிவிப்'பிற்கு நான் தொலைபேசி முலமாக மறுமொழி அளிக்கலாமா?

8.1 இணைய வழியில் (**www.immigrationdatabreach.com.au** எனும் இணைப்பில், கிடைக்கும் படிவம் மூலமாக நீங்கள் மறுமொழி அளித்தால் உங்களுடைய மறுமொழியை இன்னும் திறம்படச் செயல்படுத்த இயலும் எனும் அதே வேளையில், இந்த 'அறிவிப்'பிற்குத் தொலைபேசி மூலமாக மறுமொழி அளிக்கும் உரிமை உங்களுக்கு உள்ளது.

8.2 (02) 9330 8006 எனும் இலக்கத்தில் NRFA சட்ட நிறுவனத்துடன் தயவுசெய்து தொடர்புகொள்ளுங்கள்.

## 9 தகுதி பெற்ற மொழிபெயர்த்துரைப்பாளர்கள்

9.1 இந்த 'அறிவிப்பு' பல்வேறு மொழிகளில் கிடைக்கும். இந்த ஆவணத்தின் துவக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பைப் பாருங்கள்.

9.2 நீங்கள் தெரிவு செய்யும் மொழியில் இந்த 'அறிவிப்'பிற்கு மறுமொழி அளிக்கும் உரிமை உங்களுக்கு உள்ளது. தகுதி பெற்ற மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவரது உதவியை வேண்ட auscas@nortonrosefulbright.com எனும் மின்னஞ்சல் மூலமாக, அல்லது (02) 9330 8006 எனும் இலக்கத்தில் NRFA சட்ட நிறுவனத்துடன் தயவு செய்து தொடர்புகொள்ளுங்கள்.

## 10 இந்த 'அறிவிப்'பிற்கு மறுமொழி அளிப்பதில் எனக்கு ஏது செய்யும் விதமாக நிதி ஒத்தாசை பெறும் உரிமம் எனக்கு இருக்கிறதா?

10.1 ஆம். இந்த 'அறிவிப்'பிற்கான மறுமொழியை ஆயத்தம் செய்யும் பொழுது சட்டதரணி ஒருவரிடம் இருந்து நீங்கள் பெறும் உதவி எதற்குமான செலவிற்கு

ஈடாக $500 டாலர்கள் வரை கோருவதற்கான உரிமம் உங்களுக்கு உள்ளது. ‘மறுமொழிப் படிவ’ த்தின் மூலம் இந்த நிதியுதவியைக் கோரலாம்.

10.2 இந்த ‘நஷ்டஈடு மதிப்பீட்டுத் திட்ட’த்தில் நீங்கள் பங்குபற்றும் காலத்தில் இந்தத் திட்டத்தின் நிர்வாகியால் உங்களுக்கு அளிக்கப்படும் மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்த்துரைப்பு சேவைகளுக்கும் நீங்கள் பணம் செலுத்தத் தேவையில்லை (இதில் ‘அறிவிப்பு’ மற்றும் ‘மறுமொழிப் படிவம்’ ஆகியவற்றின் மொழிபெயர்க்கப்பட்ட பிரதிகளைப் பெறுவது உள்ளடங்கும்).

## 11 கேள்விகள் மற்றும் உதவி

11.1 இந்த ‘அறிவிப்’பிற்கு மறுமொழி அளிப்பதில் உங்களுக்கு உதவி தேவைப்பட்டாலோ, உங்களுக்குக் கேவிகள் ஏதும் இருந்தாலோ auscas@nortonrosefulbright.com எனும் மின்னஞ்சல் மூலமாக, அல்லது (02) 9330 8006 எனும் இலக்கம் மூலமாக NRFA சட்ட நிறுவனத்துடன் தயவு செய்து தொடர்புகொள்ளுங்கள்.

## 12 உங்களைப் பற்றிய தகவல்களின் பாதுகாப்பு

12.1 உங்களுடைய அந்தரங்கத்தன்மை NRFA சட்ட நிறுவனத்திற்கு முக்கியம். ‘*ஆஸ்திரேலியத் தகவல் பாதுகாப்புக் கொள்கைகள்* (*Australian Privacy Principles*) உள்ளடங்க, ‘*தகவல் பாதுகாப்பு சட்டம் 1988* (Cth)’ (*Privacy Act 1988* (Cth))-இன் பிரகாரம் NRFA சட்ட நிறுவனம் உங்களைப் பற்றிய தகவல்களைக் கையாளும்.

12.2 ‘நிர்வாக மேல்முறையீட்டு மன்ற’(Administrative Appeals Tribunal)த்தினால் பிறப்பிக்கப்பட்ட உத்திரவுகளின் கீழ் ‘நஷ்டஈடு மதிப்பீட்டுத் திட்ட’த்தின் கீழ் வழங்கப்படவிருக்கும் நஷ்டஈட்டினை சுயாதீனமாக மதிப்பீடு செய்வதற்காக ‘பொருளாதார திணைக்கள’(Department of Finance)த்தினால் NRFA சட்ட நிறுவனம் நியமிக்கப்பட்டது. அந்த நோக்கத்திற்காக உங்களைப் பற்றிய தகவல்களை NRFA சட்ட நிறுவனம் சேகரிக்கும், பயன்படுத்தும் மற்றும் வெளிப்படுத்தும். உங்களைப் பற்றிய தகவல்களை உங்களிடமிருந்து சேகரிப்பதற்கும் மேலாக, உங்களைப் பற்றிய தகவல்களை NRFA சட்ட நிறுவனமானது OAIC-யிடமிருந்தும், ‘திணைக்கள’த்திடமிருந்தும் சேகரிக்கக்கூடும்.

12.3 உங்களைப் பற்றிய தகவல்களை NRFA சட்ட நிறுவனத்தினால் சேகரிக்க இயலவில்லை என்றால், நஷ்டஈட்டிற்கான உங்களுடைய கோரிக்கையை NRFA சட்ட நிறுவனத்தினால் மதிப்பீடு செய்ய இயலாது.

12.4 NRFA சட்ட நிறுவனம் உங்களுடைய கோரிக்கையை மதிப்பீடு செய்யும் பொழுது உங்களைப் பற்றிய தகவல்களை ‘உள்நாட்டு விவகாரத் திணைக்கள’ (Department of Home Affairs) த்துடனும் ‘பொருளாதாரத் திணைக்கள’(Department of Finance)த்துடனும் பகிர்ந்துகொள்ளவேண்டிய தேவை


© Norton Rose Fulbright Australia

NRFA சட்ட நிறுவனத்திற்கு இருக்கும். உங்களுடைய கோரிக்கையையும், எங்களது மதிப்பீட்டையும் 'திணைக்களம்' விளங்கிக்கொண்டு மறுமொழி அளிக்க உதவுவதற்காக இப்படி செய்யப்படும். மருத்துவத் தொழிலர்கள் மற்றும் சட்டத் தொழிலர்கள் போன்ற சுயாதீன அறிவுரையாளர்களுடனும் உங்களைப் பற்றிய தகவல்களைப் பகிர்ந்துகொள்ளவேண்டிய தேவை NRFA சட்ட நிறுவனத்திற்கு இருக்கலாம்.

12.5 உங்களைப் பற்றிய தகவல்களை இருப்பில் வைக்க நாங்கள் பயன்படுத்தும் தகவல் தொழில்நுட்பத்தை நிர்வகிக்க எங்களுக்கு உதவும் எமது பணியாளர்களுடனும், ஒப்பந்ததாரர்களுடனும் உங்களைப் பற்றிய தகவல்களை நாங்கள் பகிர்ந்துகொள்ளக்கூடும். அப்படிப்பட்ட பணியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களில் சிலர் யு.கே போன்ற ஆஸ்திரேலியாவிற்கு வெளியே உள்ள நாடுகளில் இருக்கலாம்.

12.6 நாங்கள் இருப்பில் வைத்திருக்கும் உங்களைப் பற்றிய தகவல்களை நீங்கள் எப்படி அணுகிப் பெறலாம் மற்றும் அந்தத் தகவல்களில் எப்படித் திருத்தங்கள் வேண்டலாம் என்பதைப் பற்றிய தகவல்கள் NRFA சட்ட நிறுவனத்தின் 'தகவல் பாதுகாப்புக் கொள்கை' (Privacy Policy)-யில் உள்ளன. 'ஆஸ்திரேலிய தகவல் பாதுகாப்புக் கொள்கைகள்' (Australian Privacy Principles) - இன் மீறல் ஒன்றைப் பற்றி நீங்கள் எவ்வாறு முறைப்பாடு செய்யலாம், மற்றும் NRFA சட்ட நிறுவனம் அப்படிப்பட்ட முறைப்பாடு ஒன்றை எவ்வாறு கையாளும் என்பதைப் பற்றிய தகவல்களையும் இந்தத் 'தகவல் பாதுகாப்புக் கொள்கை' கொண்டிருக்கும். NRFA சட்ட நிறுவனத்தின் வலைத்தல த்தில், https://www.nortonrosefulbright.com/en-au/global-statements/privacy-notice எனும் இடத்தில் NRFA சட்ட நிறுவனத்தின் 'தகவல் பாதுகாப்புக் கொள்கை' -யை நீங்கள் அணுகிப் பெறலாம்.

12.7 'உள்நாட்டு விவகாரத் திணைக்களம்' (Department of Home Affairs) மற்றும் 'பொருளாதாரத் திணைக்களம்' (Department of Finance) ஆகியவற்றின் தகவல் பாதுகாப்புக் கொள்கைகளும் இதைப் போன்ற தகவல்களை உள்ளடக்கியிருக்கும்:

- Department of Home Affairs: https://www.homeaffairs.gov.au/access-and-accountability/our-commitments/privacy
- Department of Finance: https://www.finance.gov.au/about-us/privacy-policy-summary

12.8 நாங்கள் திரட்டும் உங்களைப் பற்றிய தகவல்கள் குறித்தும், நீங்கள் சமர்ப்பித்துள்ள உங்களைப் பற்றிய தகவல்களில் ஏதும் திருத்தம் செய்வது உள்ளடங்க உங்களைப் பற்றிய தகவல்களை நாங்கள் எவ்வாறு கையாள்வோம் என்பதைப் பற்றிய கேள்விகள் ஏதும் உங்களுக்கு இருந்தால், auscas@nortonrosefulbright.com எனும் மின்னஞ்சல் மூலமாக, அல்லது (02) 9330 8006 எனும் இலக்கம் மூலமாக தயவு செய்து 'நார்ட்டன் ரோஸ் ஃபுல்ப்ரைட் ஆஸ்திரேலியா' (Norton Rose Fulbright Australia)-உடன் தொடர்புகொள்ளுங்கள்.

 © Norton Rose Fulbright Australia